சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 16.04.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். NC 916/E/2024 (SA 3193/E/2022)**

திரு.கே.சுப்பிரமணி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம் - 635 001. -- பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 11.06.2024, 26.11.2025, 25.02.2026 அன்று இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைத் தொடர்ந்து, (1) பொதுத் தகவல் அலுவலர் திரு.இரா.திருமால், வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், கிருஷ்ணகிரி அவர்களின் 27.03.2026 தேதியிட்ட அறிக்கையினையும் மற்றும் (2) பொதுத் தகவல் அலுவலர் திரு.வெ.கணேசன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கிருஷ்ணகிரி அவர்களின் 27.03.2026 தேதியட்ட அறிக்கையினையும், அவர்கள் இவ்வாணையத்தில் 30.03.2026-ல் நேரில் ஆஜராகி சமர்ப்பித்தார்.

2. **11.06.2024 தேதியிட்ட இவ்வாணைய உத்தரவில்,** ***இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு முழுமையான தகவல்களை, வட்டாட்சியர் அலுவலக சர்வே பிரிவிலிருந்தோ, கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்தோ பெற்று, கட்டணம் ஏதுமின்றி மனுதாரருக்கு வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது.***

3. மேற்படி உத்தரவிற்கிணங்க தகவல் வழங்கப்படவில்லை என மனுதாரரால் 07.08.2024 அன்று தாக்கல் செய்யப்பட்ட மனுவானது இவ்வாணத்தால் ஆணை நிறைவேற்றப்படாமை மனுவாக வழக்கு எண்.NC.916/E/2024 என பதிவுசெய்யப்பட்டு, மீண்டும் மேற்படி வழக்கானது 26.11.2025 அன்று நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது:-

a) இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல்களில் கிருஷ்ணகிரி வருவாய் கோட்ட அலுவலக கோப்பு 94/2003, நாள் 14.02.2003 நாளதுவரை அலுவலகத்தில்

வரப்பெறவில்லை என்ற தகவல் 21.11.2025 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

b) மேற்கண்டவாறு மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல் உரிய தகவல் அல்ல என ஆணையத்தால் கருதப்படுகிறது.

c) எனவே, உரிய தகவல்களை, **அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன்,** **ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல்** அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை, **இவ்வாணையத்தில் 28.01.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலருக்கு/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கிருஷ்ணகிரி வட்டம் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.**

4. அதன்படி பொதுத தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர் (பொ), கிருஷ்ணகிரி சார்பு திரு.சித்தார்த் இவ்வாணையத்தில் 05.02.2026-ல் ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

5. **மேற்படி 05.02.2026 தேதியிட்ட அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்து**:-

a) இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள வருவாய் கோட்டாட்சியர் அலுவலக கோப்பு எ.94/2003/ஜி மூன்றாண்டு முடிவு (k.Dis) முறையில் முடிக்கப்பட்டுள்ளது என்றும், வட்டாட்சியர் அலுவலக ந.க.17901/2022, நாள் 04.03.2003 கோப்பு வட்டாட்சியர் அலுவலக பதிவறையில் கிடைக்கப்பெறவில்லை என்ற தகவல் 04.02.2026 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

b) இவ்வழக்கில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலக ந.க.94/2003 ஜி, நாள் 14.02.2003 கோப்பானது, கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் என்ற பொது அதிகார அமைப்பில் மூன்றாண்டு முடிவு என முடிக்கப்பட்டு கோப்பு பராமரிப்பில் இல்லாத பட்சத்தில் (கோப்பு அழிக்கப்பட்டிருப்பின்), **அதனை குறிப்பிட்டு, ஆணை உறுதி பிரமாண பத்திரத்தினை (Sworn Affidavit) மனுதாரருக்கு தகவலாக வழங்க (1) பொதுத் தகவல் அலுவலர்/ வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், கிருஷ்ணகிரி அவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.**

c) **மேலும், கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலக ந.க.17901/2002, நாள் 04.03.2003-ன்படி குருபரபள்ளி கிராம புல எண்.45, 47, 51, 62 இவற்றில் ரத்து செய்யப்பட்ட உட்பிரிவுகள் மற்றும் புல உடைமைதாரர் குறித்த ஆவணம் கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகம் என்ற பொது அதிகார அமைப்பின் பராமரிப்பில் இல்லாத பட்சத்தில், அதனை குறிப்பிட்டு, ஆணை உறுதி பிரமாண பத்திரத்தினை (Sworn Affidavit) மனுதாரருக்கு தகவலாக வழங்க (2) பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கிருஷ்ணகிரி அவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.**

d) மேற்படி ஆணை உறுதி பிரமாண பத்திரத்தினை இரண்டு பொதுத் தகவல் அலுவலர்களும், <u>**அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன்,**</u> **ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல்** அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 30.03.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க (1) பொதுத் தகவல் அலுவலர்/ வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், கிருஷ்ணகிரி மற்றும் (2) பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கிருஷ்ணகிரி ஆகியோருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.**

e) **தவறும் பட்சத்தில், தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 20(1), 20(2)-ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.**

6. அதன்படி பொதுத் தகவல் அலுவலர்/ வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், கிருஷ்ணகிரி அவர்களின் 27.03.2026 தேதியிட்ட அறிக்கை இவ்வாணையத்தில் 30.03.2026 அன்று நேரில் சமர்ப்பிக்கப்பட்டு, மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதில், இவ்வழக்கில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள ந.க.94/2003/ஜி (மூன்றாண்டு முடிவான கோப்பு என்பதால் மூ.மு.94/2003/ஜி என குறிப்பிடப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் தெரிவிக்கிறார்) கோப்பானது கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் என்ற பொது அதிகார அமைப்பில் **மூன்றாண்டு முடிவாக முடிக்கப்பட்டு கோப்பு பராமரிப்பில் இல்லை என்பதற்கான உறுதி பிரமாண பத்திரம் மனுதாரருக்கு வருவாய் கோட்டாட்சியர் அலுவலக ந.க.1711/2026/ஜி, நாள் 20.03.2026 தேதியிட்ட கடிதம் வாயிலாக வழங்கப்பட்டுள்ளதை ஆணைம் பதிவு செய்கிறது**.

7. மேலும், பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கிருஷ்ணகிரி அவர்களின் 27.03.2026 தேதியிட்ட அறிக்கை இவ்வாணையத்தில் 30.03.2026 அன்று நேரில் சமர்ப்பிக்கப்பட்டு, மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதில், இவ்வழக்கில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள, கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலக ந.க.17901/2002, நாள் 04.03.2003 தொடர்பான கோப்பு மற்றும் குருபரப்பள்ளி கிராம புல எண்கள் 45, 47, 51, 62 தொடர்பான **ஆவணங்கள் அலுவலக பராமரிப்பில் இல்லை எப்தற்கான உறுதி பிரமாண பத்திரமானது, வட்டாட்சியர் அலுவலக ந.க.6883-18/2025/அ1, நாள் 23.03.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் பதிவு செய்கிறது**.

8. மனுதாரர் இவ்வாணையத்திற்கு முகவரியிட்டுள்ள 27.02.2026 தேதியிட்ட கடிதத்தில், இவ்வழக்கு விசாரணைக்கு பிறகும் உண்மைக்கு புறம்பான பொய்யான தகவல் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

9. மனுதாரர் கடிதம் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்களின் அறிக்கைகளை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது:-

a) இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தொடர்பான ஆவணங்கள், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகம் என்ற இரு பொது அதிகார அமைப்பிலும் பராமரிப்பில் இல்லை என்பதற்கான ஆணை உறுதி

பிரமாண பத்திரமானது மனுதாரருக்கு மேற்கண்ட பத்தி 6 மற்றும் 7-ல் கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

b) தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பொது அதிகார அமைப்பின் பராமரிப்பில் உள்ள ஆவணங்கள்/ பதிவேடுகளை மனுதாரர் தகவலாக வழங்கக் கோரும் பட்சத்தில், மேற்படி ஆவணங்கள் பொது அதிகார அமைப்பின் பராமரிப்பில் இருக்கும் பட்சத்தில் அதனை தகவலாக மனுதாரருக்கு வழங்க உத்தரவிட இயலும்,

c) ஆனால் இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தொடர்பான ஆவணம் பொது அதிகார அமைப்பின் பராமரிப்பில் இல்லை என்பதற்கான ஆணை உறுதி பிரணமான பத்திரம் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். NC 916/E/2024 (SA 3193/E/2022)</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம் - 635 001.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.கே.சுப்பிரமணி,
எண்.2/109, குருபரப்பள்ளி கிராமம் (ம) அஞ்சல்,
கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம் - 635 115.

Copy to: File MP/PA**,**